அ.வ.எண். 86/2018 நாள்: 16.03.2026

பி.சா.4 திரு.S.ரவிச்சந்திரன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1)நானும் எனது அண்ணனும் ஒரே ஊரில் தான் வசித்து வருகிறோமா என்றால் நான் நாகாச்சி கிராமத்திலும் எனது அண்ணன் தஞ்சாவூரிலும் வசித்து வருகிறோம். பி.சா.ஆ.7 சாட்சி கையொப்பத்தை எப்போது செய்தேன் என்றால் 2009–ல் பணம் கொடுக்கும்போது கையொப்பம் செய்தேன். வழக்கு சொத்தை 1–ம் பிரதிவாதியிடம் விற்க வாதி என்னிடம் கூறிதான் ஏற்பாடு செய்தார் என்றால் சரிதான். எந்த தேதியில் விற்க ஏற்பாடு செய்தார் என்றால் 05.02.2009 –ல் ஏற்பாடு செய்தார். 07.02.2009–ல் நான் கையொப்பம் செய்தேன் என்று என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.6–ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பி.சா.ஆ.6 ஐ யார் எழுதியது என்றால் வரதராஜன் என்பவர் எழுதினார்.

2)மேற்படி பி.சா.ஆ.6–ல் எழுதியது உட்பட என்று வரதராஜன் கையொப்பம் செய்துள்ளரா என்றால் இல்லை. 07.02.2009 தேதியில் நான் மேற்படி பி.சா.ஆ.6–ல் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அன்றயை தினம் நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. அதேபோல் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள பரமசிவம் த/பெ சாமியய்யா என்வரின் முகவரி எழுதப்படவில்லை என்றால் சரிதான். அவர் உள்ளூர் காரர் என்பதால் முகவரி எழுதப்படவில்லை. என்னிடம் ராதாகிருஷ்ணன் (வாதி) 05.02.2009–ல் விற்பதாக கூறினார் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.6 எந்த தேதியில் எங்கு இருந்து வாங்கப்பட்டது என்றால் பிரதிவாதிகள்தான் வாங்கி வந்தார்கள், தேதி தெரியாது.

3) வாதி ராதாகிருஷ்ணனும் 2–ம் பிரதிவாதியான எனது சகோதரர் பாலசுப்ரமணியனும் கிரையம் பேசும்போதும் பணம் கொடுக்கும்போதும் நான் இல்லை என்றாலும் பின்னிட்டு பி.சா.ஆ.6 மோசடியாக உருவாக்கப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.6–ல் சுவாதீனத்தை வாதி 2–ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சுவாதீனத்தை கிரையம் பதிவு செய்யும்போதுதான் ஒப்படைப்பார்கள். வாதிக்கும் அவரது சகோதரருக்கும் இடையே மின்மோட்டார் தொடர்பான வழக்கு முடிந்துவிட்டதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் "வாதி, 2–ம் பிரதிவாதியிடம் இருந்து வழக்கு சொத்தின் அனுபவத்தை அபகரித்து கொண்டு அவரை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்டெண்ணத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனம் கிரையம் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பும் பின்பும் வாதி வசம் தான் உள்ளது என்றாலும் நான் எனது சகோதரான 2–ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

S.d/Ravichandran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.16 19:48:57 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU